வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்
ந.க.எண்.2832/அ4/2025, நாள்.01 .07.2025

----

பொருள்: பள்ளிக் கல்வி – மேல்நிலைக்கல்வி– 2025–2026 ஆம் ஆண்டு ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு நடைபெறுதல் – அரசு/நகராட்சி/உயர்/மேல்நிலைப்பள்ளி அனைத்து ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ள அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கு தகவல் தெரிவித்தல்– சார்பு.

பார்வை: 1) தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.037584/சி3/இ1/2025, நாள்.18.06.2025 மற்றும் 20.06.2025
2) தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (மேல்நிலைக் கல்வி) செயல்முறைகள் ந.க.எண்.036752/டபிள்யு1/இ1/2025, நாள்.26.06.2025

-----

பார்வையில் 1–ல் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் 2025–2026 ஆம் கல்வியாண்டிற்கான அனைத்துவகை ஆசிரியர்களுக்கு பொதுமாறுதல் கலந்தாய்வு நடத்துவது சார்பாக அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி) அவர்களின் செயல்முறைகளில் தெரிவித்துள்ளதின் அடிப்படையில் இணைப்பில் உள்ள கால அட்டவணைப்படி அனைத்து ஆசிரியர்கள் உரிய நேரத்தில் கலந்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. கலந்தாய்வு நடைபெறும் நாளில் மாற்றுப்பணி அனுமதிக்க இயலாது எனவும், தற்செயல் விடுப்பு அளித்துவிட்டு கலந்தாய்வில் பங்கேற்க வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது..

மாறுதல் கலந்தாய்வுக்கு விண்ணப்பித்து கலந்தாய்வு நடைபெறும் அன்றைய நாளில் வருகை புரியாமலோ (Absent & Late) தாமதமாக வருகைபுரிந்தாலே கலந்தாய்வில் கலந்து கொள்ள இயலாது.

**கலந்தாய்வு நடைபெறும் இடம்: ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, காந்திநகர் காட்பாடி வேலூர்.(SSA)**

**நாள் : இணைப்பில் காணும் அட்டவணைப்படி**

எனவே பொது மாறுதல் கலந்தாய்வில் காலை 9.00 மணிக்கு சார்ந்த ஆசிரியர்கள் கலந்து கொள்ளும் பொருட்டு அனைத்து அரசு/நகராட்சி/உயர்/மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியகளுக்கு தெரிவிக்கப்படுகின்றது.

இணைப்பு– கால அட்டவணை

**// ஒப்பம் //**
**முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),**
**வேலூர்.**

பெறுநர்
தலைமையாசிரியர்கள்,
அரசு/நகராட்சி/உயர்/மேல்நிலைப்பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
நகல்

1. முதன்மைக் கல்வி அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, காட்பாடி, வேலூர் கனிவுடன் அனுப்பப்படுகின்றது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர்.